## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(19.04.2024 முதல் 23.04.2024)

அறிக்கைஎண்: 06/2024 தேதி : 18.04.2024

### நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34 - 35 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும் பதிவானது.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (19.04.2024 முதல் 23.04.2024).

| கடந்த வார வானிலை (16.04.2024 முதல் 17.04.2024) | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (19.04.2024 முதல் 23.04.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 16/04 | நாள்-2 17/04 | தேதி | நாள்-1 19/04 | நாள்-2 20/04 | நாள்-3 21/04 | நாள்-4 22/04 | நாள்-5 23/04 |
| 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 1 | 1 |
| 34 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 36 | 36 | 37 | 36 |
| 27 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 27 | 26 | 27 | 26 |
| 5 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 1 | 3 | 5 | 6 |
| 75-74 | 80-78 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-50 | 80-50 | 80-50 | 80-50 | 70-50 |
| 6 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 22 | 22 | 20 | 20 | 14 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தென் தென் கிழக்கு |

### நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 22.04.2024 மற்றும் 23.04.2024 ஆகிய தினங்களில் லேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 - 37 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 - 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 14 – 22 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | எதிர்பார்க்கப்படும் வானிலையை கருத்தில் கொண்டு கோடை உழவு செய்யவும் |
| பயறுவகை பயிர்கள் | அறுவடை | முதிர்ந்த உளுந்து மற்றும் பாசிபயறு பயிர்களை அறுவடை செய்யவும். |
| | | அறுவடை செய்த பயிரை வெயிலில் காய வைத்து பின்பு பயறைப் பிரித்தெடுத்து சுத்தம் செய்து சேமிக்கவும். |

| | | |
|---|---|---|
| தென்னை | | தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிற்ப்பதற்க்கு ஒரு பாக்கெட் தென்னை டானிக்கை 200 மி.லி வேர் மூலம் கொடுக்க வேண்டும். |
| கால்நடைகளுக்கு | மாடு | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் மூலம் துடைக்கவும். |

**குறுஞ்செய்தி**

ஏதிர்பார்க்கப்படும் வானிலையை கருத்தில் கொண்டு கோடை உழவு செய்யவும்

**இயக்குநர்**